2. தகவல் கோரல்

மாவட்டங்கள் பிரிவினை—வல்லுநர் குழு.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மாவட்டங்கள் பிரிவினை சம்பந்தமாக ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி அமைக்கப்பட்டு விட்டதாகவும் அதில் யார், யார் இருப்பார்கள் என்றும் இந்த அவைக்குத் தெரிவிப்பதற்கு முன்னதாக பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கப்பட்டு, இன்றைக்கு பத்திரிகையில் அதுபற்றிய குறிப்பு வெளிவந்திருக்கிறது. அந்தக் கமிட்டிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிற ''டெர்ம்ஸ்'' ஆஃப் ரெபரன்ஸ் (Te ms of efe en e என்ன என்பது ஒன்றும் நமக்குத் தெரியாது. வள்ளியம்மை மாவட்டத் தலைநகரம் சம்பந்தமாக எக்ஸ்பர்ட் கமிட்டிக்கு விடப்படும், அவர்கள் முடிவு செய்வார்கள் என்று முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதி அந்த டெர்ம்ஸ் ஆஃப் ரெபரன்சில் இருக்கிறதா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. மேலும் மூன்று மாவட்டங்கள் புதியதாக அமைக்கப்படும் என்று முதல்மைச்சர் ஈரோட்டில் அறிவித்திருக்கிறார். ஆகவே இந்த மூன்று மாவட்டங்கள் சரியாக இல்லாமல், 'வேக்' ஆக இருக்கிறது. இதனால் ஜனங்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலையிருக்கிறது. இதுசம்பந்தமாக அது என்ன விஷயம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவான அறிக்கையை இந்த அவையில் வைக்கலாம். அவ்வாறு வைப்பதனால், ஜனங்கள் மத்தியில் இருக்கும் பதட்டமான நிலையைத் தவிர்க்கலாம். இந்த அறிக்கையை சீக்கிரமாக அவையிலே வைத்து, அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. ப. நெடுமாறன் : அதைப்பற்றித்தான் நானும் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே மாவட்டங்கள் பிரிவினை பற்றி அரசு அறிவித்தது. ஆனால் அதைப்பற்றி, அடுத்த நடவடிக்கை—உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவை அமைப்பது பற்றியும், சட்டமன்றம் கூடிய போது, அதை வெளியிலே அறிவித்தது முறையல்ல. அது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அதுபற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். நடவடிக்கை 1, 2, 3 என்று தொடர்ந்து நடக்கிறதே தவிர, அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சட்டசபையில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அப்படி உடனுக்குடன் ஒரு குழு அமைக்கப்பட்டது என்று சொல்ல வேண்டுமென்று கோருவது முறையல்ல. நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றனவே தவிர, வேறு அல்ல. ஆக குழு அமைப்பதை இங்கே சொல்லியாக வேண்டுமென்பது தேவையில்லை.

திரு. ரா. உமாநாத் : அதனுடைய ''டெர்ம் ஆப் ரெபரன்ஸ்'' என்ன என்பதைத் தெரிவிக்கவேண்டும். மூன்று புதிய மாவட்டங்களை அறிவிக்கும்போது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல தலைவர்களுடைய பெயர்களில் மாவட்டங்களை வைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் வந்துள்ளது. அந்த வேண்டுகோளுக்குப் பதில் சொல்லப்பட்டது. அவ்வளவுதான்.

திரு. ரா. உமாநாத் : மூன்று புதிய மாவட்டங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த மாவட்டப் பிரிவினை சம்பந்தமாக, ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்று அறிவித்து, ஒரு லிஸ்டு இருக்கிறது. மேலும் 3 புதிய மாவட்டங்கள் என்று பிரிப்பது சம்பந்தமாக எக்ஸ்பர்ட் கமிட்டி அமைத்து அது செயலாக்கத்திலே இருக்கிறது. அதிலே ''டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'' என்ன என்பது தெரியாது. இதை முதல்வர் அவர்கள் சீக்கிரமாக தெளிவுபடுத்தி, இந்த அவையிலே ஒரு அறிக்கையை வைக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உமாநாத் விரும்புகின்ற முறையில், இருக்கின்ற நிலவரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களை கலந்துகொண்டு, இந்த அவைக்கு இது சம்பந்தமாக, விரிவாக அறிவிக்கின்ற முறையிலே முடிவு எடுத்து, அதைத் தெரிவிக்கலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மைய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கும் உணவு தானியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, இரா. கருப்பையா, தி. கு. நல்லப்பன், பொ. உத்திராபதி, ஏ. டி. கருப்பையா, செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் '' தமிழகத்தில் கடுமையான வறட்சிக்குப் பின்னால் தொடர்ந்து மழையின் காரணமாக வெள்ளத்தால் உணவு தானியங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் மீண்டும் மத்திய அரசாங்கம் மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டிய அரிசியின் அளவைக் குறைத்துள்ளதால், தமிழகத்தில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.